**அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சங்கம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணக்கமின்மைகள் - | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 51 ஆவது பந்தியின் பிரகாரம் முழுமையாக பெறுமதி பூச்சியமான அதாவது தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 64,281,974 ஆன பெறுமதியான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களில் 352 விடயங்களின் பயன்தரு ஆயட்காலம் மீள் மதிப்பீடு செய்து ஏடுகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தில் காணப்படுகின்ற நிதி நெருக்கடியின் காரணமாக இலங்கை விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டினை செய்து கொள்வதற்கு நிதி ஏற்பாடு வழங்குதல் மிகவும் கஷ்டமான விடயமாகும். எனினும் கூட்டுத்தாபனம் கணக்கு கூற்றுக்களை எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கல்வி வெளியீட்டு திணைக்களத்தால் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 27,951,750 விற்பனை முற்பண தொகை கடன் பட்டோர் பெறுவனவாக குறிப்பிடப்பட்டமையால் கூட்டுத்தாபனத்தின் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் கணக்குகளில் தற்போது சரி செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அவ்வாறு கிடைக்கின்ற பணத்தை விற்பனை முற்பணமாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கொடுக்கல் வாங்கல்களின் இரட்டை பதிவுகளை சரியாக இனங்கண்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2021 ஆம் ஆண்டில் தேசிய லொத்தர் சபையுடன் லொத்தர் சீட்டுக்களை அச்சிட்டு வழங்குவதற்காக உடன்படிக்கை செய்யப்பட்ட தொகையில் 49 சதவீதம் | 2023 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளில் அதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய அதிகார பலத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், கணக்கு |

| | | | |
|---|---|---|---|
| | பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் தலைவரால் 44 சதம் வரை குறைப்பதற்கு இணங்கியமையினால் கூட்டுத்தபானத்திற்கு ஏற்பட்ட ரூபா 10,519,265 நட்டம் அறவிட முடியாக்கடன் ஒதுக்கமாக சீராக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அந்த நட்டத்தை கடன் பட்டோரிடம் இருந்து கழித்து முன்னைய ஆண்டின் சீராக்கமாக நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்தில் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது, அதன் பிரகாரம் நிறுத்தி வைக்கப்பட்ட நட்டம் மீளாய்வாண்டின் போது அப்பெறுமானத்தால் மேலும் அதிகரித்திருந்ததுடன், மீளாய்வாண்டின் அறவிட முடியாக் கடன் செலவினம் அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | வைக்கும் போது அந்த பதிவுகளை சரியாக இனங்கண்டு கணக்கு வைத்தல் வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டின் நிலையான வைப்பிற்காக கணிப்பீடு செய்யப்பட்ட வட்டி ரூபா 491,369 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டின் போது 06 மாதங்களுக்குரிய எதிர்பார்க்கப்பட்ட வங்கி வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், அது 07 மாதங்களாக இருக்க வேண்டியிருந்ததுடன், ஒரு மாதத்திற்குரிய வட்டி குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உரிய காலப்பகுதி சரியாக இனங்கண்டு கணக்கீட்டு பதிவுகளை தயாரித்தல் வேண்டும். |
| (iv) | விற்பனை கிரயத்தை கணிப்பிடுவதற்காக உரித்தல்லாத செயற்பாட்டு செலவினத்தை அடிப்படையாகக் கொண்டு விற்பனைக் கிரயம் கணிப்பிடப்பட்டதன் காரணமாக விற்பனை கிரயம் ரூபா 20,468,587 இனால் மிகை மதிப்பீட்டிற்கு உட்பட்டு வருமானக் கூற்றில் | தாமத வழுக்களினால் இது விற்பனைக் கிரயத்தில் சேர்க்கப்பட வேண்டிய போதிலும், அது செயற்பாட்டு கிரயமாக குறிப்பிட வேண்டியிருந்தது. | நிதிக் கூற்றுகளில் சரியான வகைப்படுத்தலின் கீழ் விடயங்கள் உள்ளடக்கப்படல் வேண்டும். |

மொத்த இலாபம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி (ரூபா) | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி (ரூபா) | வேறுபாடு (ரூபா) | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (i) | அறவிட வேண்டிய மீதி | 3,210,565 | - | 3,210,565 | சரியாக உறுதிப்படுத்தி அறிக்கை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு மீதிகளை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | செலுத்த வேண்டிய மீதி | 166,509,372 | 172,728,682 | 6,219,310 | சரியாக உறுதிப்படுத்தி அறிக்கை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு மீதிகளை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.4 அதிகாரபலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகார பலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மக்கள் வங்கியினால் வழங்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வங்கி மேலதிக பற்று எல்லை ரூபா 40,000,000 ஆக இருந்ததுடன், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாரு நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் வங்கி மேலதிக பற்று ரூபா 41,090,093 ஆகக் காணப்பட்டதன் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விஞ்சி ரூபா 1,090,093 கடன் பெறப்பட்டிருந்தது. | இது தற்காலிக மேலதிக பற்று விஞ்சியிருந்த போதிலும், அதற்கான பணம் வைப்புச் செய்யப்பட்டவுடன் வங்கியினால் அறவிடப்படுகின்றது. அது வங்கியின் வட்டி அறவிடும் கொடுக்கல் வாங்கல்களுக்கு மாத்திரம் எல்லை விஞ்சியிருந்தது. | அங்கீகாரிக்கப்பட்ட மேலதிக பற்று எல்லையில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.5 விடயங்களை வலியுறுத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 2.3 தொடர்பில் கவனம் செலுத்தப்படுகின்றது. மீளாய்வாண்டின் இறுதியில் தேறிய சொத்துக்கள் ரூபா 446,712,212 மறை மீதியாக காணப்படுவதுடன், 2022 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 931,669,314 ஆன நிறுத்தி வைக்கப்பட்ட வருமானம் மறை மீதி மீளாய்வாண்டில் நட்டம் ரூபா 380,702,801 மற்றும் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட முன்னைய ஆண்டு சீராக்கங்களை மேற்கொண்டதன் பின்னர் மீளாய்வாண்டின் இறுதி அளவில் ரூபா 1,163,063,864 ஆன மறை பெறுமதி காண்பித்து குறைக்கப்பட்டிருந்தது. மேலும், 2021 ஆம் ஆண்டில் ரூபா 715,004,435 ஆன மறை தொழிற்படு மூலதன நிலைமை மீளாய்வாண்டின் போது ரூபா 1,087,098,816 வரை தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்திருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமையை நல்ல நிலைக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய செலுத்தவேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்தின் மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது ரூபா 2019 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்கு உரிய கடன்பட்டோர் மீதி ரூபா 176,740,812 ஆகும். கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டின் போது இந்த கடன் தொகையில் ரூபா 1,252,517 மாத்திரம் தீர்த்து வைத்திருந்ததுடன், 2019 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளில் கடன் மீதியில் இருந்து 0.7 வீதமே காணப்பட்டது. | இந்த மீதியை தீர்த்து வைப்பதற்காக தேவையான தகவல்களை கண்டறிவதற்கு உள்ள வசதியீனத்தின் காரணமாக கடன் பட்டோர் மீதியை தீர்த்து வைப்பதில் மிகவும் வசதியீனமாக இருந்தது. இவ்வாறு அறவிடுவதற்கு வசதியீனமான கடன் பட்டோர் மீதியை தெரிவு செய்து பொது முயற்சிகள் திணைக்களத்தின் Pe/1/2021/(i) சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் | நிலுவை மீதியை தீர்த்து வைப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

கணக்குகளில் இருந்து பதிவழிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும்.

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணங்காமைகள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| 2021 நவம்பர் மாதம் 16 ஆம் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டிக் கோவையின் 3.3 ஆம் பந்தி | கூட்டிணைந்த திட்டத்தின் தேவைகளுக்கு இணங்கும் வகையில் மனித வள திட்டம் கூட்டுத்தாபனத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | 2021 நவம்பர் மாதம் 16 ஆம் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டிக் கோவையின் 3.3 அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.8 நிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்தால் மக்கள் வங்கியில் நுகேகொடை கிளையில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 25,000,000 ஆன நிலையான வைப்பு காலாவதியாவதற்கு 27 நாட்களுக்கு முன்னர் மீண்டும் மேற்கூறப்பட்ட வட்டி வீதத்தின் கழ் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்த போதிலும், அந்த 27 நாட்களுக்குரிய ரூபா 177,183 வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | நிலையான வைப்பை பிணையாக வைத்து குறுங்கால கடன் பணம் பெறுகின்றமையினால் அதனை மீண்டும் நீண்ட காலம் நீடித்துக் கொள்வதற்கு தேவையாகும். அதனால் இந்த நட்டம் ஏற்பட்டிருந்தது. | கூட்டுத்தாபனத்தின் முதலீட்டு தீர்மானத்தை எடுக்கும் போது முதலீட்டைம திப்பீடு செய்து சரியாக தீர்மானம் எடுத்தல் வேண்டும். |

## 1.9 வரி பிரமாணங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2020 ஆம் ஆண்டு முதல் வேறுபாடுகள் இன்றி உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய வரி மீதி ரூபா 109,467,898 ஆன இருந்ததுடன், அது மீளாய்வாண்டு வரையிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பட்டிருக்கவில்லை. | உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்துவதற்கு உள்ள வரித் தொகை தொடர்பாக 2022 திசெம்பர் மாதம் கலந்துரையாடல் நடாத்தப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் வற் வரி செலுத்துவதற்கு திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் காணப்படுகின்ற நிதி நிலைமையின் அடிப்படையில் பகுதி பகுதியாக செலுத்தப்படுகின்றது. மேலும், முன்னைய ஆண்டுகளின் போது நிலுவை ESC, NBT போன்ற வரி மீதிகளை பதிவழித்தல் தொடர்பாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்துடன், கலந்துரையாடல் நடாத்தப்படுவதுடன், அதன் ஒரு பகுதியை பதிவழிப்பதற்கு அவர்கள் இணங்கியிருந்தனர். இந்த அறிக்கை கிடைத்தவுடன் அந்த மீதியை கூட்டுத்தாபன கணக்கில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | இந்த வரி மீதியை விரைவாக தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் பெறுமதி சேர் வரி பொறுப்புக்கள் ரூபா 26,641,688 ஆக இருந்ததுடன், அதனை தீர்த்து வைப்பதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் எதிர்காலத்தின் போது பணம் பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், அந்த பணம் கிடைத்த பின்னர் சகல வற் வரி தொகையும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | இந்த வரி மீதியை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | என குறிப்பிடுகின்றோம். தற்போது உழைக்கப்படுகின்ற இலாபம் முன்னைய ஆண்டுகளுக்குரிய கடன் பணம் செலுத்துவதற்கு ஏற்பட்டமையினால் நிதி ரீதியான பிரச்சினை காணப்பட்டது. தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளது. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 380,702,801 பற்றாக்குறையாக இருந்துதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 281,957,906 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 98,744,895 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு கூட்டுத்தாபனத்தின் அச்சக வருமானம் ரூபா 808,511,204 இனால் குறைவடைந்தமை மற்றும் நிதிச் செலவினம் ரூபா 80,206,506 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரமான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

கூட்டுத்தாபனத்தின் பிரதான வருமான மூலமான கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் பாடப் புத்தகத்தின் அச்சிடல் வருமானம் மீளாய்வாண்டின் போது ரூபா 41,569,625 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் பாடப்புத்தகங்கள் அச்சிடல் வருமானம் ரூபா 1,186,918,385 ஆகும். அதன் பிரகாரம் பிரதான வருமானம் உழைத்தல் ரூபா 1,145,348,760 இனால் வீழ்ச்சியடைந்ததுடன் அதன் சதவீதம் 96 சதவீத வீழ்ச்சியாகும்.

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

2021 ஆம் ஆண்டின் போது முறையே 0.6 : 1 மற்றும் 0.4 : 1 ஆன நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் மீளாய்வாண்டின் போது 0.28 : 1 மற்றும் 0.16 : 1 வரை வீழ்ச்சியடைந்திருந்தது. அவ்வாறே 2021 ஆம் ஆண்டு போது முறையே 9.78 சதவீதம் மற்றும் (12.7) சதவீதம் ஆன மொத்த இலாப விகிதம் மற்றும் தேறிய இலாப விகிதம் மீளாய்வாண்டின் போது (4.73) சதவீதம் மற்றும் 46 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பணிப்பாளர் சபை அங்கீகாரம் இன்றி ஒப்புதல் கடிதத்தில் மாத்திரம் கூட்டுத்தாபனத்தின் தலைவரால் அச்சிடப்படுகின்ற ஒரு லொத்தர் சீட்டில் கூட்டுத்தாபனத்திற்கு கிடைப்பதற்கு குறித்துரைத்த பணம் | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது கூட்டுத்தாபனத்தின் தலைவரால் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இன்றி உரிய குறைத்தல்கள் | உரிய சட்ட ரீதியான நடவடிக்கைகளை பின்பற்றி இந்த பணத்தை மீண்டும் அறவிடுவதற்கு |

| | | |
|---|---|---|
| 49 சதத்தில் இருந்து 44 சதவீதம் வரை குறைத்தமையினால் 2021 ஆம் ஆண்டில் மற்றும் மீளாய்வாண்டில் முறையே ரூபா 11,899,603 மற்றும் ரூபா 7,228,985 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 19,128,588 வருமானம் கூட்டுத்தாபனத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், அவ்வாறு இழக்கப்பட்ட வருமானத்தை மீண்டும் பெற்றுக் கொள்வதற்காக பின்னர் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்ட போதும், அதனை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. எதிர்காலத்தின் போது இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறாதிருப்பதற்கு தேவையான உள்ளக கட்டுப்பாடு கட்டமைப்பை வலுப்படுத்துதல் வேண்டும். |

**3.2 இனங்காணப்பட்ட நட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கு முன்னர் கூட்டுத்தாபனத்திற்கு விற்பனை ஐந்து விற்பனை கடைகள் மூடப்பட்டிருந்ததுடன், அந்த விற்பனை கடைகளின் கொடுக்கல் வாங்கல்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 37,199,768 பெறுமதியான கடன்பட்டோர் மீதி மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் போது ரூபா 670,173 மாத்திரமே தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. அதனை அறவிடுவதற்கு உள்ள மொத்த கடன் அளவில் 1.8 சதவீதம் ஆகும். | இந்த கடன் மீதியில் இருந்து ரூபா 32,961,638 தொகை சங்கராஜ மாவத்தை விற்பனை கடைக்குரிய நிலுவையாக இருந்து கடனுக்காக அதன் ஒரு பகுதி கணக்காய்வு பிரிவினால் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு மோசடிகள் தொடர்பாக ரூபா 2 மில்லியனுக்கு அண்ணளவான தொகைக்கு முறைப்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மிகுதி தகவல்களின் நிலைமையை கவனத்தில்கொண்டு பதிவழிப்பதற்கோ அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த கடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு முன்னின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் அறவிடுவதற்கு பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பாக விசாரணையொன்றை நடாத்தி பொறுப்புக்களை புறந்தள்ளிய உத்தியோகத்தர்களிடம் இருந்து உரிய பணத்தை அறவிடுவதற்கும் அறவிடக்கூடிய கடன்பட்டோரிடம் இருந்து பணத்தை விரைவாக அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்தின் அடிப்படை வருமான மூலமாக தேசிய லொத்தர் சபையின் லொத்தர் சீட்டுக்களை அச்சிடுவதன் மூலம் கிடைக்கின்ற வருமானம் இனங்காணப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் அதன் பங்களிப்பு ரூபா 405,863,648 ஆகும். எனினும், மீளாய்வாண்டில் தேசிய லொத்தர் சபை தண்டப் பணம் மற்றும் தாமதக் கட்டணமாக ரூபா 20,072,300 அறவிடப்பட்டிருந்தது. அந்த தண்டப் பணம் மற்றும் தாமதக் கட்டணம் அச்சிட்ட மொத்த லொத்தர் வருமானத்தில் ஐந்து சதவீத அளவாகும், மேலும், மிளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனம் அச்சிடுகின்ற தேசிய லொத்தர் சபையின் லொத்தர் சீட்டுக்கள் இரண்டில் ஒரு லொத்தர் சீட்டு கூட்டுத்தாபனத்தில் அகற்றப்பட்டு வேறு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நாட்டில் காணப்பட்ட பாதகமாக பொருளாதார சூழ்நிலையினால் மூலப் பொருட்களை பெற்றுக் கொள்வதில் பிரச்சினையான நிலைமையினால் இந்த தாமதம் ஏற்பட்டுள்ளதுடன், அதன் மூலம் தாமதக் கட்டணம் அதிகரித்திருந்தது. இந்த நிலைமையை தவிர்ப்பதற்காக தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேசிய லொத்தர் சபையின் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் படி கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட மெகா பவர் லொத்தர் 2023 சனவரி மாதம் முதல் இன்னுமொரு அச்சகரக்க அவரின் தீர்மானத்தின் பிரகாரம் அகற்றப்பட்டிருந்தது. இந்த கேள்வி முறைமையின் அடிப்படையில் பெறப்படாதிருந்தமையால் அவர்களின் தீர்மானித்தின் பிரகாரம் இணங்குவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டிருந்தது. எனினும், அதனை அகற்றுவதை நிறுவத்துவதற்கு எங்களால் தேசிய லொத்தர் சபையுடன் கலந்துரையாடப்பட்ட போதும் அவை வெற்றியளிக்கவில்லை. | தண்டம் மற்றும் தாமதத்தை தவிர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுகக்வேண்டியிருந்ததுடன் தமது வருமான மூலங்கள் சிலவற்றின் அடிப்படையில் இல்லாத வருமான அந்த மூலங்களை பல்வகைப்படுத்துதல் வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அச்சகக் கூட்டுத்தாபனத்தின் 25 உத்தியோகத்தர்களுக்கு 2000 | பதிலளிக்கப்படவில்லை. | தாபன விதிக் கோவையின் 11 ஆம் அத்தியாயத்தின் |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை பல்வேறு ஆண்களின் போது பதிற்கடமை பதவிக்காக நியமிக்கப்பட்டிருந்தனார். மேலும் அந்த உத்தியோகத்தர்களுக்கு இடையே 23 உத்தியோகத்தர்கள் தமது உள்ளபடியான பதவியின் கடமைகளுக்கு மேலதிகமாக 2021 முதல் 2022 ஆம் ஆண்டு வரை பதிற்கடமை உத்தியோகத்தர்களாக செயற்பட்டு அந்த காலத்திற்காக ரூபா 1,545,611 படியொன்று வழங்கப்பட்டிருந்தது. | | 13.3 பிரிவின் படி பதிற்கடமை நியமிக்கப்படுவது உள்ளபடியான பதவியொன்று நியமிக்கப்படும் வரை தற்காலிக தீர்வொன்றாக மாத்திரம் ஆகும். அதன் பிரகாரம் பதவிக்கு முழு நேர உத்தியோகத்தரின் சேவை தேவையாயின் உள்ளபடியான நியமனம் தாமதம் இன்றி மேற்கொள்ளப்பட ல் வேண்டும். |
| (ii) | கூட்டுத்தாபனத்தின் ஆரம்ப ஊழியர் தொகுதிக்குரிய பயிற்சி பெறாத 138 தொழிலாளர்களுக்காக அங்கீகாரம் காணப்பட்ட போதும் அங்கீகரிக்கப்படாத அச்சக உதவியாளர் கணிஷ் உற்பத்தி ஊழியாகள் 202 பேர் நிரந்தர ஊழியர்களாக ஆட்சேர்த்தமையினால் ஒட்டுமொத்த மிகை ஊழியர்களின் எண்ணிக்கை 64 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த மிகை ஊழியர்களுக்காக 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 94,158,837 சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | மனித திட்ட மொன்று தயாரிக்க வேண்டியிருந்ததுட ன், அதன் பிரகாரம் தேவையான ஊழியர்களின் எண்ணிக்கை அங்கீகரித்துக் கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | கூட்டுத்தாபனத்தின் பிரதான ஐந்து பதவிகளான பொது முகாமையாளர், பிரதி பொது முகாமையாளர், மனித வள முகாமையாளர், நிதி முகாமையாளர் மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளர் போன்ற பதவிகள் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் வெற்றிடமாக காணப்பட்டதுடன், மனித வள முகாமையாளர் மற்றும் நிதி முகாமையாளர் போன்ற பதவிகளுக்காக பதிற்கடமை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். | பதிலளிக்கப்படவில்லை. | தாபன விதிக் கோவையின் 11 ஆம் அத்தியாயத்தின் 13.3 பிரிவின் படி பதிற்கடமை நியமிக்கப்படுவது உள்ளபடியான பதவியொன்று நியமிக்கப்படும் வரை தற்காலிக தீர்வொன்றாக மாத்திரம் ஆகும். அதன் பிரகாரம் பதவிக்கு முழுநேர உத்தியோகத்தரின் சேவை தேவையாயின் உள்ளபடியான நியமனம் தாமதம் இன்றி மேற்கொள்ளப்படல் வேண்டும். |